திரு. செ. மாதவன் : சப் இன்ஸ்பெக்டர்கள் பொதுவாக நம் மாநிலத்தில் தேவைக்குக் குறைவாக இருக்கிறார்கள் என்பது உண்மையா ? அதை டி.ஐ.ஜி. அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : மேலும் மேலும் சப் இன்ஸ்பெக்டர்களை ரெக்ரூட் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஆகவே, இனி மேல் ரெக்ரூட்டட் சப்-இன்ஸ்பெக்டர்கள் இல்லை என்ற குறை இருக்காது.

* 156 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை ஆஃப் டூட்டி எடுத்துக்கொள்ளலாம் என்ற விதியிருக்கிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வாரத்திற்கு ஓர்முறை எடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்களுக்கு பிரத்தியேக ரெமுனரேஷன் கொடுக்கப்படுகிறதா ?

(உ) ஆமெனில் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : போலீஸ்காரர்களுக்கு எப்போதுமே வாரத்திற்கு ஒரு முறை ஆஃப் ட்யூட்டி என்று இருக்கிறது. அது சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆஃப் ட்யூட்டியில் வேலை செய்கிற அன்று சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுகிற டி.எ. க்ளெயிம் செய்கிறார்கள். க்ளெயிம் செய்கிற படி அவர்களுக்கு கிரமப்படி கிடைக்க வேண்டியதாகும். ஆகவே, அப்படி வேலை செய்கிற தினங்களில் அந்த டி.எ. யோடு, ஆஃப் ட்யூட்டி க்ளெயிம் செய்யக் கூடாது என்றால் அதற்கான ரெம்யூனரேஷனையும் சேர்த்து க்ளெயிம் செய்யலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : 1953-ல் பரிசீலனை செய்து கான்ஸ்டேபிள்ஸ், ஹெட் கான்ஸ்டேபிள்ஸ் இவர்களுக்குத்தான் ஆஃப் ட்யூட்டி கொடுக்கவேண்டும், சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இல்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

வானூர், மரக்காணம் யூனியன்களுக்கிடையிலுள்ள கழுவெளி

* 157 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள வானூர் யூனியனுக்கும், மரக்காணம் யூனியனுக்கும் மத்தியிலுள்ள கழுவெளியின் விஸ்தீரணம் என்ன ?

(இ) அதில் விவசாயத்திற்கு லாயக்காக உள்ள நிலம் எவ்வளவு?

(உ) அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

(எ) அதில் இதுவரை விவசாயத்திற்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 8,759.03 ஏக்கர்.

(இ) 302.51 ஏக்கர்.

(உ) இந்த 302.51 ஏக்கர் பரப்பளவு முன்னமேயே சிவோஜமா சுவாதீனத்தில் இருக்கிறது.

(எ) 96.03 ஏக்கர்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அந்த கழுவெளியில் உள்ள மிச்ச நிலங்களை பாண்டிச்சேரிக்கு சொந்தமான அரவிந்த கோஷ் ஆசிரமத்திற்கு கூட்டு ஸ்தாபனத்திற்காக நூறு ஆண்டு அடமானத்திற்காக கேட்டிருப்பதாக கலெக்டர் அவர்களுக்கு மனுக் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அது பரிசீலனையில் இருப்பதாக அறிகிறோம். எங்களுக்குள்ள கவலையெல்லாம் . . .

கனம் சபாநாயகர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அப்படி அடமானம் செய்து கொடுக்க இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தடுக்க என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா : நான் கொடுத்த விவரத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள களர் நிலம்

* 158 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் களர் நிலம் இருக்கிறது?

(இ) அவைகளை உயர் நிலமாக்க விவசாயத்துறையினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சுமார் 45 சதவீத நிலங்கள் பல்வேறு நிலைமைகளில் உவர் எறியும், களர்பூத்தும் உள்ளன. இந்நிலங்களில் 2 சதவீதம் (சுமார் 12 ஆயிரம் ஏக்கர்) பயிர் செய்வதற்கு முற்றிலும் உதவாதபடி உவரும், களரும் பாய்ந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

(இ) உவராகவும், களராகவும், சதுப்பாகவும் உள்ள நிலப் பகுதிகளை மீட்பதில் குடியானவர்களுக்கு ஆர்வமூட்டுவதற்காக, மண்ணைப் பயன்படுத்துவதற்கான களிக்கல் (Gypsum)

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS